# புலிகளுக்கும், இஸ்ரேல் உளவுப் படை ‘மொஸாட்’ அமைப்புக்கும் தொடர்பில்லை - பிரதமர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு இஸ்ரேலின் உளவுப்படையான மொஸாட் இயக்கம் ஆயுதங்களை வழங்கி வருகின்றது என்று முஸ்லிம் காங்கிரஸ்கட்சியின் தலைவர் ஜனாப் அஷ்ரப் தெரிவித்த குற்றச்சாட்டை இலங்கைஅரசு மறுத்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 6 இதழ் 254

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22 — 10 — 1992

## வீதி வெளிச்ச சேவை வழங்க மாநகரசபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தடைப்பட்டதால் செயலிழந்த வீதிவெளிச்ச சேவையை பல வீதிவிபத்துக்கள் ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு பரீட்சார்த்தமாக சில இடங்களில் மண்ணெண்ணெ விளக்குகள் மூலம் வீதி வெளிச்ச வசதியினை

(4-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக் கொலை

(கொழும்பு)

வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் சுப்பிரமணியம் இந்திரகுமார் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சடந்த திங்கட்கிழமை அதிகாலை மட்டக்களப்பு பெரிய போரதீவில் வைத்து இவர் கொலை செய்யப்பட்டுள்ளார்

(4ம் பக்கம் பார்க்க)

● வடமராட்சிப் பகுதியில்

# 3 பொம்மர்கள் அனர்த்தம்; குடியிருப்புக்கள் பலத்த சேதம்!

## வீதியில் சென்றோர் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசுக்கு சொந்தமான மூன்று குண்டு வீச்சு விமானங்கள் வடமராட்சிப்பகுதியில் நேற்றுக்காலை மேற்கொண்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். கடைகள் மற்றும் குடியிருப்புக்கள் பலத்த சேதமடைந்தன.

குண்டு வீச்சுத் தாக்குதலின் போது வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த கரவெட்டியைச் சேர்ந்த வெற்றிலிங்கம் துரைச்சாமி (வயது-43), சோமசுந்தரம் ஞானசுந்தரம் (வயது-36) என்பவர்கள் படுகாயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் எடுத்துச்செல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை சுமார் 10-30 மணியளவில் வடமராட்சிப்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா மீது சுவாமி மீண்டும் ஆவேசம்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக நடவடிக்கை எடுக்காவிடில வழக்கு தொடரப்போவதாக டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

4-ம் பக்கம் பார்க்க)

## ஆங்கில ஆசிரியர் பற்றுக்குறை நீக்கப்படும்

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர் பற்றுக் குறையைப் போக்குவதற்கு கல்வி இலாகா புதிய திட்டத்தை அமுல் செய்து வருகின்றது.

குறிப்பாக கஷ்டப் பிர

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டு. பகுதியில் மூன்று படைமுகாம்களுக்கு மூடுவிழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மூன்று இராணுவ முகாம்களை ஸ்ரீலங்கா அரசு மூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகரை, உன்னிச்சை, மாங்கேணி ஆகிய இராணுவ முகாம்களே ஸ்ரீ லங்கா அரசால் மூடப்பட்டவையாகும்.

இப்பகுதியில் விடுதலைப்புலிகள் அடிக்கடி மேற்கொண்டு வந்த தாக்குதலும், படையினர் மத்தியில் ஏற்பட்டுள்ள

(4ம் பக்கம் பார்க்க)

### பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

அக்டோபர் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்களும். காசோலைகளும் நேற்று முன்தினம் 20ம் திகதி செவ்வாய் யாழ். செயலகத்திலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(71)

### 40 பேர் கைது

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரி தியோபிலஸ் சில வாரங்களுக்குமுன் கொழும்பு யூனியன் பிளேசில் வைத்து சுட்டுக்கொலைப்பட்ட சம்பவத்தையடுத்து 40 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ச-வி)

### படகு அழிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கடற்பிராந்தியத்தில் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று ஸ்ரீலங்கா கடற்படையால் தாக்கிஅழிக்கப்பட்டதாகவும் அதில் பயணம் செய்தவர்கள் அனைவரும் கொல்லப்பட்டதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

(க)

## ஐந்து பரீட்சைகளை கொழும்பில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஐந்து பரீட்சைகளை கொழும்பில் நடாத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளதாக யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இலங்கை கல்வி நிருவாக சேவை, கணக்காளர் சேவை மற்றும் இவற்றையொத்த சேவைகள் இந்த மாதம் 31ம் திகதி தொடக்கம் நவம்பர் 6ம் திகதி வரையும் நடாத்தப்படும்

ஒன்றுபடுத்திய சுங்கச் சேவையில் சுங்கச் சோதனைகாரரை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சையும், அஞ்சலதிபர்

(4-ம் பக்கம் பார்க்க)

### இன்று தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் கொண்டு வரப்பட்ட தபால்கள் இன்று வியாழக்கிழமை முதல் விநியோகிக்கப்படும்.

(4ம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப் விடுத்துள்ள ஹர்த்தால் அறைகூவல் ஒருதலைப்பட்சமானது

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் நாளை வெள்ளிக்கிழமை ஹர்த்தாலுக்கு விடுத்திருக்கும் அழைப்பு ஒருதலைப்பட்சமானதாகும் என்று சுதந்திரக்கட்சி தொழிற் சங்க சம்மேளன தலைவர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

மாற்றுக் கட்சிகளுடனே

(4ம் பக்கம் பார்க்க)

சுத்தக் காற்று சுற்றிலும் நிலவிட
நித்தம் ஒரு மரம் நடுவோம்

## முஸ்லிம்களுக்கு தனிப்படை எதுவும் வேண்டாம் - அமீர்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கென தனிப் படை எதுவும் வேண்டாமென சிறிலங்கா மக்கள் காங்கிரஸ் தலைவர் ஏ. எச். டி. அமீர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் முஸ்லிம்களுக்கென தனிப் படை வேண்டும் என விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கே அவர் இவ்வாறு பதில் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கென தனிப் படை அமைத்து எதையும் சாதித்துவிடமுடியாது. தேசிய ரீதியிலேயே எதுவும் அமைய

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கோழித்தீன் வெற்றுப் பக்கற்

கோழித்தீன் வெற்றுப் பக்கற் வாங்குகிறேம். மிக்வைற், யாழ்ப்பாணம். (எ-2520)

### தேவை

கோழிப் பண்ணை வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும். திரு. ந. பத்மசோதி, கூட்டுறவுப் பரிசோதகர், நெல்லியடி, திக்கம் ரோட், ஆலங்கட்டையடி, வதிரி. [சி-6901]

### தீபாவளி வாழ்த்துக்கள்

எங்கள் ஸ்தாபனத்தில் தீபாவளி வாழ்த்துக்கள் மொத்தமாகவும், O/L, A/L மாதிரி வினுவிடைகள், பாடசாலை புத்தகங்கள் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ளலாம். தினேஸ் புத்தகசாலை, 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-2512)

### குறைந்த சலார் குறித்த நேரம் தரன் ஸ்ருடியோ

தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92 — 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6878)

### வரலாறு O/L

சமூகக் கல்வி, வரலாறு ஆண்டு II வினு-விடை குறிப்புகள் பொதுப்பரீட்சை, சாதாரணதரப் பரீட்சைகளுக்கு மீட்டல் செய்வதற்கும், திறமைச் சித்திக்கும் ஏற்றது. ஆக்கம்: நா மயில்வாகனம்: புத்தகசாலைகளில் பெறலாம். (சி-6908)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (சி-6855)

## இராசி பலன்

22-10-1992

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 06)

ஏகாதசி மு. ப. 11-20 வரை பூரம் பி. இ. 3-30 வரை சித்தயோகம் இராகு காலம் பகல் 1-32 முதல் 3-02 வரை சுபநேரம் காலை 7-32 முதல் 9-02 வரை ஏகாதசி விரதம்.

மேடம்: வம்பு வழக்கு, விரயம், பிரார்த்தனை.

இடபம்: தொழில் சங்கடம் குடும்பகவலை, மனச்சுமை.

மிதுனம்: குடும்பஒற்றுமை, மனமகிழ்ச்சி, பணவரவு.

கடகம், கைப்பொருள் நஷ்டம், நண்பர் பகை, அலைச்சல்.

சிங்கம்: பிணி மறையும், பந்துக்கள் வருகை, தானதர்மம்.

கன்னி: கௌரவ பாதிப்பு, குடும்ப சிக்கல், மனச்சங்கடம்

துலாம்: காரியசித்தி, புதிய உறவு, கல்வியால் பெருமை.

(4ம் பக்கம் பார்க்க)

## மாணவர் உடல், உள வளர்ச்சிக்கு விளையாட்டுப்போட்டி அவசியம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் மாணவரது உடல் உள வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு எதிர்காலத்தில் அவர்கள் வாழ்வதற்கு ஏற்ற வாய்ப்புக்களையும் தேடிக்கொடுக்கிறது சமூக முன்னேற்றத்துக்கும் இவ்வித விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன

இவ்வாறு வடபிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம், யாழ். ஆணைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் எடுத்துக்கூறினர்.

பாடசாலை அதிபர் திருமதி சரோஜினிதேவி சோமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் கல்விப்பணிப்பாளர் மேலும் உரை நிகழ்த்துகையில் பல வித அசௌகரியங்களுக்கு மத்தியில் இப்போட்டியினை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்த அதிபரையும் மற்றும் ஆசிரியர்களையும் தாம் வெகுவாகப் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

விளையாட்டுப்போட்டி ஏற்பாடுகளை ஆசிரியர் திரு. ஜி. வி. ராதாகிருஷ்ணன் செய்திருந்தார். உப அதிபர் திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம் நன்றி கூறினர்.

## கல்வி சான்றிதழ்

(கொழும்புத்துறை)

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்விச்சான்றிதழ்நெறி இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை 1992 நவம்பர்மாதம் 21, 22 28, 23ம் திகதிகளில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## 6 மாத அபாயப்படி வழங்கப்பட்டது

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 1989-ம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான 6 மாத காலப்பகுதியில் கடமையாற்றிய பணியாளர்களுக்கான அபாயப்படி கடந்தவாரம் வழங்கப்பட்டது.

மாதம் ஒன்றிற்கு ஐநூறு ரூபா வீதம் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது. (101)

## நுளம்புத் தொல்லை

(நெல்லியடி)

பருத்தித்துறை அசினரி ஆதார வைத்தியசாலையில் நுளம்பு தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் சிகிச்சைக்காக வாட்டில் அனுமதிக்கப்பட்டவர்கள். பெரிதும், பாதிப்பு அடைகிறார்கள். குறிப்பாக சிறுகுழந்தைகள் மிகவும் பாதிப்புக்காளாகிறார்கள். (160)

## பிளாஸ்ரிக் விரிப்பு அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

மழைகாலத்தில் பயன்படுத்துவதற்கு உகந்த பிளாஸ்ரிக் விரிப்புகளை ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவை இணையத்தில் அங்கம் வகிக்கும் அகதிமுகாம்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுளைது. (154)

## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மண்ணெண்ணை வெற்றுப் பீப்பாக்கள் 26-10-992 திங்கட்கிழமை காலை 0 மணிக்கு பல்கலைக்கழக களஞ்சியசாலைக்கு அருகாமையில் வைத்து ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றிபெறுபவர் உரிய முழுத் தொகையையும் உடனடியாக பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பீப்பாக்கள் முழுவதையும் அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழகத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1992 10-20 (எ 2524)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

## External Registration 1991/92

**Admission and Welcome of Freshers and Sophomore (External Student) 1991/92**

Admission and welcome of external students will take place in sessions under the patronage of the Vice-Chancellor in Kailasapathy Auditorium.

Session I - 24-10-92 (Saturday) at 2-00 p. m. for Freshers First in Arts/Commerce

Session II - 24-10-92 (Saturday at 3-00 p. m. for Sophomore
Bachelor of Arts General Part I
Bachelor of Commerce Part I

Please collect your provisional registration letter from 22nd onwords from the External Examination Unit.

Registrar

A-2517

## அரசாங்க அறிவித்தல்

20-10-92இல் பரிசாரகர் பயிற்சியை முடித்த சுகாதார திணைக்கள ஊழியர்களிற்கு பின்வரும் திகதிகளில் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பரீட்சை நடைபெறும். சம்பந்தப்பட்டவர்கள் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

25-10-92 காலை 8-00 மணி – எழுத்துப் பரீட்சை
26-10-92 }
27-10-92 } – செய்முறைப்பரீட்சை

வைத்தியகலாநிதி
பொ. இரத்தினசபாபதி
சு. சே. பிராந்திய பணிப்பாளர்

சுகாதாரசேவைகள்
பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம். [எ-2523]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளிவாரிக் கற்கைநெறி பதிவுகள்

**1991 / 1992 கல்வியாண்டு**

யாழ்ப்பாணம்/வெளிவாரிக் கற்கைநெறிகளான கலை முதல், வர்த்தக முதல் வர்த்தகமாணி பகுதி 1, பொதுக் கலைமாணி பகுதி 1 ஆகியவற்றிற்குப் பதிவு செய்த மாணவர்கள் தங்கள் பதிவுக்கான கடிதத்தை வெளிவாரிப் பகுதியில் 21-10-1992 முதல் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் தலைமையில் பின்வரும் முறையில் பிரவேச, வரவேற்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அமர்வு I — 24-10-1992 (சனிக்கிழமை) பிற்பகல் 2-00 மணி.
புதிய மாணவர்கள் (கலை/வர்த்தகம்)

அமர்வு II — 24-10-1992 (சனிக்கிழமை) பிற்பகல் 3-00 மணி.
இரண்டாம் வருட மாணவர்கள் (கலை/வர்த்தகம்)

பதிவுபெற்ற அனைத்து மாணவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். (ஏ-2518)

## தொழினுட்பக் கல்லூரி-யாழ்ப்பாணம் 1993-ம் கல்வியாண்டிற்கான மாணவர் அனுமதி

எமது கல்லூரியின் 1993-ம் கல்வியாண்டு பயிற்சி நெறிகளுக்கு மாணவர் அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் 21-11-1992-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமென அறியத்தருகிறேன்.

அதிபர்

தொழினுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
1992-10-21 (எ-2521)

அன்பர்கள், ஆதரவாளர்கள், சிறுவர்கள் அனைவருக்கும்

**தீபாவளி நன்நாளுக்காக அழைக்கின்றேம்.**

வழமைபோல் எமது நிறுவனம் புதன்கிழமை மூடப்பட்டிருக்கும்.

## நியு லக்கி சலூன்

உரிமையாளர்: "மணியம்"

910, கே. கே. எஸ். வீதி.
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(ஏ-2515)

## ★ கைதாகி காணமல் போன 152 தமிழ் இளைஞர்கள் பற்றி ஐ. நா. குழுவிடம் முறையீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக் கழக அகதிமுகாமில் வைத்து 5-09-90ம் ஆண்டு படையின ரால் கைதுசெய்யப்பட்டு காணமல்போன 152 தமிழ் இளைஞர்களின் தகவல்களைப் பெற்றுத்தருமாறு ஐ. நா. மனித உரிமைகள் குழுவை பெற்றோர்கள் கோரியுள்ள னர்.

மட்டக்களப்பு பல்கலைக்கழக அகதிமுகாமில் சுமார் 40,000 மக்கள் முன்னிலையில் கைதான மேற்படி 152 தமிழ் இளைஞர் களினதும் நிலைபற்றி இது வரை எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இந்த அகதிமுகாமை மட் டக்களப்பு பல்கலைக்கழகமே நடாத்திவந்தன. இந்த இளை ஞர்களை படையினர் கைது செய்துகொண்டு சென்றதற் கான சாட்சியங்கள் ஏராள மாக உள்ளது. இதுபற்றி விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என வும் ஐ நா. மனித உரிமைகள் குழுவிடம் கோரப்பட்டுள் ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண த்தில் 1990ல் இருந்து இது வரை சுமார் 7000 தமிழ் மக் கள் காணமல் போனதும் தெரிந்ததே. (சி)

## குடியேற்ற மக்களுக்கு நல்லின ஆடுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டுக் கழகத்தினரால் தென் மராட்சியில் உள்ள அப்துல்லா குடியேற்ற மக்களுக்கு நல் லின ஆடுகள் வழங்கப்பட் டன.

இவ் ஆடு வழங்கலை தென் மராட்சி கோட்ட தளபதி பரணி ஆரம்பித்துவைத்தார்.

இக்குடியேற்றத்தைச் சேர்ந்த 22 குடும்பங்களுக்கு ஒரு நல்லின ஆடு வீதம் 21 மறியாடுகளையும் அவற் றினை சினைப்படுத்தவென ஒரு கடாவும் கொடுக்கப்பட்டுள் ளது.

இந்த ஆடு வழங்கலானது யாழ். மாவட்டம் எங்கும் நல்லின ஆடுகளை பெருக்கும் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டுக் கழகத்தின் திட்டத் துக்கமையவே இடம்பெற் றது. (அ)

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள ஊரிகா வற்றுறை ப. நோ. கூ. சங்க மக்கள் கடையில் எமது சங்க பாவனையாளர்களின் நிவா ரண அட்டைக்கு 1 கிலோ வீதம் இவ்வாரத்திற்கு சீனி விநியோகிக்கப்படுகிறது. மண் ணெண்ணெய் கிளையில் ஒரு அட்டைக்கு 2 லீற்றர் வீதம் விநியோகிககப்படுகிறது. (அ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் மனைப்பொருளியல் சித்தி நெறியினரால் மனைப் பொருளியல் கண்காட்சி இன்று 22ம், தேதியும் நாளை 23ம் தேதியும் நடைபெறவுள் ளது.

கலாசாலை அதிபர் வை. கா. சிவப்பிரகாசம் கண்காட் சியை திறந்து வைப்பார்.

பிரதம விருந்தினராக சுண் டுக்குளி மகளிர் கல்லூரி முகா மையாளர் செல்வி. எஸ். சின்னப்பு கலந்து கொள் வார். (144)

## ஜெயலலிதா மீது அவதூறு கருணாநிதிக்கு எதிராக வழக்கு

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெய லலிதா பற்றி அவதூறாக பேசி யதாக தி.மு க தலைவர் கருணா நிதி மீது தமிழகஅரசு வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த வழ க்கில் கருணாநிதி நவம்பர் 5ம் திகதி நீதிமன்றில் ஆஜரா கும்படி நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரசு சார்பாக தொடரப்பட்ட அவ்வழக்கில் கூறப்பட்டிருப்பதாவது:

3-5-92ல் வேப்பேரியில் நடந்த கட்சிப் பொதுக்கூட் டத்தில் பேசிய தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி முத லமைச்சர் ஜெயலலிதாவின் மதிப்பைக் குறைக்கும் வகை யில் பொய் என்று தெரிந்தும் அவதூறாகப் பேசினார்.

ஊழல் நடந்திருப்பதாகவும் பத்திரிகை சுதந்திரத்தை நசுக்குவதாகவும் பொய்யான செய்திகளை பேசியுள்ளார்.

எனவே கிரிமினல் அவதூறு சட்டத்தின்கீழ் கருணாநிதியை தண்டிக்க வேண்டும். இந் திய சட்டம் 499 மற்றும் 500வது பிரிவின் கீழ் கருணா நிதியை தண்டிக்க வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்ட மனுவை நீதிபதி விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு 5-11-92 இல் கருணாநிதியை நீதிமன் றில் ஆஜராகும்படி உத்தர விட்டுள்ளார்.

இதேபோல் தி மு.க. பேச் சாளர் தீப்பொறி ஆறுமுகம் ஓட்டேரியில் நடந்த பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியதாகவும் வழக்குத் தொடரப்பட்டு அவருக்கும் மன்றில் 4-11-92 இல் ஆஜரா கும்படி உத்தரவிடப்பட்டுள் ளது. (ரி)

## தளபாட பற்றுக்குறை நிவர்த்தி

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பகு தியிலுள்ள பாடசாலைகளுக்கு பழுதடைந்த தளபாடங்கள் புனர்வாழ்வுப் பகுதியினரால் திருத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியிலுள்ள பாட சாலைகளில் நிலவும் தளபாட பற்றுக்குறையை நிவர்த்தி செய்ய வடமராட்சி வடக்கு. தென்மராட்சிமேற்குப்பகுதியி லுள்ள பாடசாலைகளிலிருந்து வந்த பழுதடைந்த தள பாடங்களைத் திருத்தி வட மராட்சி கிழக்குப்பகுதிப் பாடசாலைகளுக்கு வழங்கப் படவிருக்கின்றன. (61)

## நிறை வாழ்வு இல்ல சிறுர்களுக்கு தீபாவளி பரிசு

(யாழ்ப்பாணம்)

வீரவேங்கை கஸ்ரோ (இயல் வாணன் அல்லது சோ. கமல நாதன் நினைவாக திருநெல் வேலி சைவவித்தியா விருத்தி சங்கத்தில் உள்ள நிறை வாழ்வு இல்லச் சிறுர்களுக்கு தீபாவளிப் பரிசில்கள் வழங் கப்படவுள்ளன. இதற்கான பரிசில்களை கஸ்ரோவின் தந்தை யான சுப்பிரமணியம் சோம சுந்தரம் வழங்குவார்.

இம்மாதம் 24ம் திகதி சனிக் கிழமை மாலை 4 மணியளவில் வட்டுக்கோட்டை தொண் டேயக் கட்டிட மண்டபத்தில் ஆடம்பரமற்ற முறையில் நடைபெற ஏற்பாடாகியுள்ள இப்பரிசில் வைபவத்தில் வீர வேங்கை கஸ்ரோ நிகழ்வுகள் கொண்ட வீடியோப்படக் காட்சியும் இடம்பெறும். (அ)

## பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாசத் தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 24ம் திகதி சனிக் கிழமை காலை 10 மணிக்கு சமாசத் தலைவர் திரு. டானி யல் அன்ரனி தலைமையில் யாழ். நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெறும். [154]

## ★ நுண்கலைக் கழக விவகாரம்: பல்கலைக்கழககலைப்பீடஅவை முன்னைய முடிவை மாற்றியது

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைக் கழக விவகாரம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட அவை தனது முன்னைய முடிவைமாற்றிக்கொண்டுள்ள தாக அறிவித்துள்ளது

இதுதொடர்பாக வெளியி டப்பட்ட அறிக்கையின் விப ரம் வருமாறு:

கடந்த மே மாதம் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத் தைச் சேர்ந்த பேராசிரியர், விரிவுரையாளர் ஆகிய இருவர் இராமநாதன் நுண்கலைக்கழ கத்தின் பாடத்திட்டத்தில் பண்ணிசையை இணைப்பது பற்றித்தெரிவித்த கருத்து களுக்கெதிராக அவர்களின் பெயர்களைத் தாங்கிய சுலோக அட்டைகளுடன்மருதமடைத் திலிருந்து யாழ். பல்கலைக்கழ கத்தினை நோக்கி நுண்கலைக் கழக மாணவர்கள் ஊர்வல மாக வந்திருந்தனர்.

இவ்வூர்வலத்திற்குப் பின் னணியாகச் சில போதனாசிரி யர்களுமிருந்தனர் எனவும் சந் தேகிக்கப்பட்டது. பின்னர் துணைவேந்தர் இது பற்றி விசாரிக்க மூன்று பேராசிரியர் கள் அடங்கிய ஒரு விசாரணைக் குழுவையும்நியமித்திருந்தார். இக்குழு தனது அறிக்கையைத் துணைவேந்தரிடம் கையளித் ததைத் தொடர்ந்து துணை வேந்தர் இதன் அமுலாக்கம் பற்றிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

ஊர்வலத்தினால் வெறுப் படைந்த யாழ். பல்கலைக்கழக கலைப்பீட அவை சம்பந்தப் பட்டவர்களுக்கெதிராக நட வடிக்கை எடுக்கப்படும்வரை நுண்கலைப்பீடம் சம்பந்த மான விடயங்கள் பற்றி கலந் தாலோசிப்பதில்லை என்று முடி வெடுத்திருந்தது. இதனால் இராமநாதன் நுண்கலைக்கழக நடவடிக்கைகள் ஓர் ஸ்தம்பித நிலையை அடையும் கட்டத் தினை எதிர்நோக்கின. இச்சந் தாப்பத்தில் கலைப்பீடாதிபதி யின் ஆசியுடன் கலைப்பீட ஆசி ரியர்கள் சிலர் மேற்கொண்ட முயற்சியால் ஓர் சுமுக நிலை உருவாக்கப்பட்டது

இதன்படி இம்மாதம் பதி னைந்திகதி கலைப்பீட அவை யின் விசேட கூட்டம் ஒன்றும் ஒழுங்குசெய்யப்பட்டு அதில் நுண்கலைக்கழகப் போதனாசிரி யர்கள்சிலர் குறிப்பாக ஊர்வ லத்தில் சம்பந்தப்படுத்தப் பட்ட பேராசிரியர், விரிவுரையாளர் ஆகியோரிட மும், பொதுவாக கலைப்பீட அவையிடமும் ஊர்வலம் தொடர்பாக தமது மனவருத் தத்தினையும் மன்னிப்பையும் கேட்டதைத்தொடர்ந்து கலைப்பீடஅவை இராமநாதன் நுண்கலைக்கழக விடயங்கள் பற்றிக் கலந்தாலோசிப்ப தில்லை என்ற தனது முன்னைய முடிவை மாற்றிக்கொண்டது.

இதன், இத்தகைய முடிவு இராமநாதன் நுண்கலைக்கழ கத்தின் வளர்ச்சிக்காக எதிர் காலத்தில் பல திட்டங்களை இவ் அவையினால் முன்னெடுத் துச் செல்வதற்கான வாய்ப் பையும் அளித்துள்ளது.

## பாடசாலைகளில் சூழல் பாதுகாப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டுக் கழகத்தின் விவசாய சூழல் பாதுகாப்பு பகுதியினர் பல்வேறு மட்டத்திலும் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்த ரங்குகளை நடத்திவருகின்ற னர்.

இந் நடவடிக்கைகளின் தொடராக பல்வேறு பாட சாலைகளிலும் மேற்படி கருத் தரங்குகளை நடாத்தவுள்ள னர்.

இதன் ஆரம்பமாக கடந்த 19-ம் திகதி காலை 8.30 மணி யளவில் கனகரத்தினம் மத் திய மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற் றது.

20-ம் திகதி காலை 9 மணி யளவில் யாழ் வேம்படி மக ளிர் கல்லூரியிலும் கருத்த ரங்கு நடைபெற்றது.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை பாரதி வித்தியாசாலையிலும் நடைபெறவுள்ளது.

## தீவக மக்களின் வைத்தியசாலை

(ஆனைப்பந்தி)

இடம்பெயர்ந்த தீவக மக்க ளுக்காக வேலணை பிரதேச சபையின் ஆயுள்வேத வைத் தியசாலைஒன்று, யாழ்ப்பாணம் 369, கே. கே எஸ். வீதியில் இயங்கி வருவதாகவும், தீவக மக்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் வேலணை பிரதேசசபை அறிவித்துள் ளது. (101)

## தொழிலாளி, காவலாளிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தி லுள்ள பாடசாலைகளிலும் மற்றும் கல்விக்கந்தோர்களில் கடமையாற்றும் காவலாளி, தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அவர்களது முழுமையான விப ரங்களை அனுப்பிவைக்குமாறு மாகாண கல்வியமைச்சுகோரி யுள்ளது.

மேற்படி ஊழியர்கள் நிய மனம் பெற்ற நாளிலிருந்து 1992 ஜனவரி 15ஆம் திகதி வரை தொடர்ச்சியாக சேவை யாற்றியவர்கள் தமது நிரந் தர நியமனத்திற்கு உரிய பிறப்பு, அத்தாட்சிப்பத்திரம், நியமனக்கடிதம், கல்வித்தகை மைச்சான்றிதழ்ஆகியவற்றின் உண்மைப்பிரதிகளைச் சிபார்சு செய்துஇம்மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குமுன்னர் யாழ் பிராந்திய கல்விபணிப் பாளருக்கு அனுப்பி வைக்கு மாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [154-157]

## திருமலையில் ஜனதிபதி செயலகம்

(திருமலை)

நடமாடும் ஜனதிபதி செய லகத்தின் 11வது அமர்வு அடுத்த வருடம் திருமலையில் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமாக நேற்று முன்தினம் திருமலையில் நடை பெற்ற கூட்டத்தில் செயலக அமர்வு திருகோணமலையில் அடுத்தவருடம் ஜனவரிமாதம் 29ம் திகதி முதல் 31ம் திகதி வரை நடாத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளதக்க அறி விக்கப்பட்டது. (வி)

## புத்தகக் கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த 16ம் திகதி ஆரம்பமான நூலக வாரம் நாளை 23ம் திகதி வெள் ளிக்கிழமை வரை நடை பெறும்.

இதன் நிறைவாக 24ம் திகதி சனிக்கிழமை புத்தகக்கண் காட்சியும் இடம்பெறும். [154]

## உரம் விநியோகம்

(கொழும்புத்துறை)

தொல்புரம் கமநலசேவை நிலைய உரக்களஞ்சியத்தில் காலபோக விவசாயத்துக்குத் தேவையான சகல உரவகைக ளும் விநியோகிக்கப்படுகிறது.

இவ் உரவகைகளை விவசாயி கள் நேரில்வந்து இங்குபெற லாம்என தொல்புரம் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. இ. இராசேந்திரம் தெரிவித்துள் ளார். (154)

## 1993 ம் ஆண்டுக்கான
# யாழ். மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்ட விபரம் கோரல்

(யாழ்ப்பாணம்)

1993 ஆண்டுக்கான யாழ். மாவட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உடன் அனுப்பி வைக்குமாறு, வடக்கு-கிழக்கு மாகாணசபையின் ஆளுநர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

1993ம் ஆண்டு யாழ். மாவட்ட அபிவிருத்தித்திட்டங்களுக்கு வேண்டிய பணத்தின் விபரங்களை சரியாக கணக்கிட்டும், வேலைத்திட்டங்களின் அறிக்கையையும், விபரமாக அறிவிக்கும்படியும் தனது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இவ்வாண்டு அபிவிருத்தி வேலைகளுக்கென ஒதுக்கப்பட்டபணத்தின் ஒரு பகுதியாக 10 லட்சம் ரூபாவும், யாழ் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. (வி)

## அணு ஆயுத உற்பத்தி:
# பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி நிறுத்தம்

(வாஷிங்டன்)

பாகிஸ்தான அணுஆயுத உற்பத்தியை கைவிடும்வரை, இராணுவ உதவி எதுவும் அதற்கு வழங்கப்படமாட்டாது என்று அமெரிக்கா மீண்டும் பாகிஸ்தானுக்கு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணுஆயுத உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது. என்பதை அறிந்த அமெரிக்கா, அந்த நாட்டுக்கு ஆண்டுதோறும் வழங்கிவந்த 1500 கோடி டொலர் இராணுவஉதவியை கடந்த ஆண்டு முதல் நிறுத்திவைத்துள்ளது.

இந்த இராணுவ உதவி தொடரவேண்டுமானல், பாகிஸ்தான், தனது அணு ஆயுத உற்பத்தியை உடன் நிறுத்த வேண்டும் என்று, அமெரிக்க அதிகாரி ஒருவர் நேற்று வாஷிங்டனில் தெரிவித்தார். (வி)

# அமைய எழுதுநர்களின் ஆவணங்கள் பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற அமைய எழுதுநர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து யாழ் நகரின் பல்வேறு திணைக்களங்களிலும் கமையாற்றுகின்ற அமைய எழுதுநர்களுக்குரிய ஆவணங்கள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

இப்போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதென்றும் மத்திய அரசாங்கத்துக்கும், மாகாண அரசுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளமையாலேயே இவ்வாறான மீள் பரிசீலனை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகின்றது.

இதற்கென மாகாணசபையின் உயர்தர அதிகாரி ஒருவரும் வருகை தந்துள்ளார் என்றும் அவரே இப்பரிசீலனையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் தெரிகிறது. (161)

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் தனது மைதானத்தில் நடாத்திவரும் உதைபந்தாட்ட நொகவுட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பின்வரும் கழகங்கள் மோதுகின்றன.

முதலாவது ஆட்டத்தில் திருநகர் பாரதி கழகமும் சென். பீற்றர் கழகமும் மோதுகின்றன. 2-வது ஆட்டத்தில் சென். மேரிஸ் கழகமும், சென் ரோக்ஸ் கழகமும் மோதுகின்றன. (வி)

# தெய்வானைக்கு ஹலீமா பெயரில் பாஸ்போர்ட்

(கொழும்பு)

தெஹிவோவிற்றதோட்டப் பகுதியைச் சேர்ந்த தெய்வானை என்ற பெண்ணுக்கு ஹலீமா என பெயர்மாற்றி பாஸ்போட் வழங்கி மத்திய கிழக்குக்கு அனுப்பி வைக்க முயற்சித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவர் பொலிசாரால் தேடப்படுகிறார்.

இந்தப் பெண் கட்டுநாயககா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டதை அடுத்தே இவரை அனுப்ப ஒழுங்கு செய்த முகவர் தேடப்பட்டு வருகிறார். (கே)

### கிரிக்கெட்
# இந்தியா 232 - 7

[ஹராவே]

இந்தியாவுக்கும், சிம்பாபேவுக்குமிடையில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் கிரிக்செட் போட்டியில் நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது, இந்தியா 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 232 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சிம்பாபே முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 456 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. [வி]

# நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியை சேர்ந்த மு. வைத்திலிங்கம் என்பவர் விட்டுச் சென்ற கிடைத்தற்கரிய 100க்கு அதிகமான நூல்களை அவர்கள் குடும்பத்தினர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

அவருடைய மகன் சச்சிதானந்தமும் வைத்திலிங்கம் குடும்பத்தினரும் யாழ். பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் அ. துரைராசாவிடம் இந்த நூல்களை கையளித்தனர். (சு)

### முஸ்லிம்களுக்கு
[1ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும் இல்லையேல் அழிவுதான் மிச்சம்.

எல்லா மக்களையும் பாகுபாடின்றி அணைத்துச் செல்ல வேண்டும். இவ்வாதமுறையில் அமையும் கொள்கைகளை தமது அமைப்பு எதிர்ப்பதாகவும் அவர் மேலும் கூறினர். (கே)

### இன்று
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி சப்பலில்கொண்டு வரப்பட்ட 423 தபால்பொதிகளும் நேற்று மாலை யாழ். தபால் நிலயத்துக்குகொண்டு வரப்பட்டது. இத்தபால்கள் அனைத்தும் இன்றும், நாளையும் விநியோகிக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிவது (150-159-வி)

### ஆங்கில ஆசிரியர்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தேசங்களில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆங்கிலஆசிரியர் பற்றுக்குறையை தீர்ப்பதற்காக, நாட்டிலுள்ள ஐந்து நிறுவனங்களில் ஆங்கில ஆசிரியர்களுக்கு கல்வி இலாகா தற்போது பயிற்சி அளித்து வருகின்றது.

இப்பயிற்சி நிலையங்களிலிருந்து ஆண்டு தோறும் 113 ஆங்கில ஆசிரியர்கள் வெளியேறுகின்றார்கள்.

அண்மைக் காலங்களில் நாட்டில் 22 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு பற்றுக்குறை நிலவியபோதிலும். தற்போது 1500 வெற்றிடங்கள் மட்டுமே இருப்பதாக கல்வி இலாகா தெரிவித்துள்ளது. (வி)

### பொலிஸ் சார்ஜன்ட்
1ம் பக்கத் தொடர்ச்சி]

என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

லீவில் தனது சொந்த ஊருக்குச் சென்றபோதே இவர் சுடப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

### வீதி வெளிச்ச
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்குவதற்கான திட்டமொன்றினை மாநகர சபை வகுத்துவருகிறது. பொருத்தமான வடிவமைப்பு மாநகர சபை கட்டிடக் கலைஞரால் தயாரிக்கப்பட்டு, சபையின் வேலைத்தளத்திலேயே மேற்படி விளக்குகள் உருவாக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மாநகர சபை மின்சாரப் பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா மேற்கொண்டு வருகின்றார். (159

### அஷ்ரப் விடுத்துள்ள
1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கங்களுடனே இது பற்றி கலந்தாலோசிக்காமல் ஒருதலைப்பட்சமாக முடிவு எடுத்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால், இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தர முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் நாளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரினால் விடுக்கப்பட்டிருக்கும் ஹர்த்தாலுக்கு ஆதரவு அளிப்பது இல்லைஎன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்றக்குழு முடிவு செய்துள்ளது. (கே)

### வடமராட்சிப் பகுதியில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியை பல தடவைகள் வட்டமிட்ட குண்டுவீசசுவிமானங்கள் உடுப்பிட்டிச் சந்திப் பகுதியில் இரு குண்டுகளை வீசியதில் வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் காயமடைந்தனர். பல வீடுகள், கடைகள் என்பன பலத்த சேதமடைந்தன.

பின்னர் மூன்று குண்டுவீச்சு விமானங்களும் வல்வெட்டித் துறைச்சந்திக்கு அருகாமையிலும் இரு குண்டுகளை வீசித் தள்ளியதில் குடியிருப்புகள் பல சேதமடைந்துள்ளன (க-51-55-61)

### ஜெயலலிதா
(1ம பக்கத் தொடர்ச்சி)

தனது குற்றச்சாட்டுகள் குறித்து நிதி அமைச்சருக்கு "பெட்டிசன்" அனுப்பப்போவதாகவும்நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில மக்கள் நலன்கருதி வழக்கு ஒன்றை தாக்கல் செய்யப் போவதாகவும் அவர் மேலும் சென்னையில் பத்திரிகையாளரிடையே பேசும் போது கூறினர். (கே

### மட்டு. பகுதியில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த இழப்புகளுமே மேற்படி மூன்று இராணுவ முகாம்களும் மூடப்படுவதற்குரிய காரணங்கள் என்றும் கூறப்பட்டன.

மேலும் ஸ்ரீலங்கா சிப்பாய்கள் பலர் இராணுவத்தை விட்டுதப்பியோடுவதும் படையினர்மத்தியில் பலக்குறைவை ஏற்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

வாகரை, மாங்கேணி, ஆகிய இராணுவ முகாம்கள் வாழைச்சேனைக்கும் திருமலைக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் செயற்பட்டுவந்ததும் உன்னிச்சை இராணுவ முகாம் மட்டக்களப்பிற்கு மேற்கில்உள்ளபடுவான்கரைப் பகுதியில் செயற்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. (க)

### ஐந்து பரீட்சைகளை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சைகையாளர்களுக்கான பொறுப்பாளர் பரீட்சையும் இம்மாதம் 31ம் திகதியும்,

கல்வி டிப்ளோமா முழுநேரப் பயிற்சிநெறிக்குத் தெரிவு செய்வதற்கான பரீட்சை நவம்பர் 14ம் திகதியும்,

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை நவம்பர் 8ம திகதியும் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது (சு)

### இராசிபலன்
(2ம் பக்கத் தொடர்ச்சி)

விருச்சிகம்; சுபகாரியம், தாய்பாசம், வெளியூர்செய்தி.

தனுசு: கடன் உபாதை, குடும்ப வெறுப்பு, உடல் உபாதை.

மகரம்: தொழில் பதட்டம், தாழ்மைநிலை, தம்பட்டம்.

கும்பம்: வாக்கு சாதுரியம், குடும்பசுகம், அன்னியர் உதவி

மீனம்: எதிர்பார்த்தநன்மை புத்திரர் செலவு, தொழில், சிறப்பு.

— ஜோஸ்யர்

### புலிகளுக்கும்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி விடயம் பற்றி நேற்று நாடாளுமன்றத்தில பிரதமர் டி. பி விஜயதுங்க உரையாற்றுகையில்:

விடுதலைப்புலிகளுக்கும் இஸ்ரேல் மொஸாட் இயக்கத்துக்கும் தொடர்பு இருக்கின்றது என்பதற்கும் புலிகளுக்கு 'ஆயுதங்களை வழங்கி வருகிறார்கள் என்பதற்கும் எதுவித ஆதாரமும் இல்லை, என்று உறுதிப்படக் கூறிய பிரதமர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்தப்படும இடங்களுக்கு அரசு பலத்த பாதுகாப்பு வழங்கும் என்றும் கூறினர். (வி)

# தொழில் முயற்சிகளை பதிவு செய்யும் கால அட்டவணை

(யாழ்ப்பாணம்)

வாணிபம், தொழில் முயற்சிகளைப் பதிவுசெய்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வெளியிட்டுள கால அட்டவணை

| வாணிபம்/ தொழில் தன்மை | சங்கானை உதவி அ. அ. பிரிவு | | தெல்லிப்பளை உதவி அ. அ. பிரிவு | | உடுவில் உதவி அ. அ. பிரிவு | |
|---|---|---|---|---|---|---|
| 1. பவுண், பொன், வெள்ளி நகை வாணிபம், நகை உற்பத்தித் தொழில், அடைவுகடை. | 23 - 10 - 92 26- 10- 92 வரை | | 31 - 10 - 92 03 - 11 - 92 வரை | | 04 - 11 - 92 07 - 11 - 92 வரை | |
| 2. பலசரக்கு வாணிபம் | ” | ” | ” | ” | ” | ” |
| 3. புடவை வாணிபம் | ” | ” | ” | ” | ” | ” |
| 4. கட்டிடப் பொருட்கள்/ மின்சார உபகரணங்கள்/ மோட்டார் உதிரிப்பாக வாணிபம் | ” | ” | ” | ” | ” | ” |
| 5. விடுதிகள்/மதுபானசாலை தேனீர்ச்சாலை | 27 - 10 - 92 30 - 10 - 92 வரை | | ” | ” | 08 - 11 - 92 11 - 11 - 92 வரை | |
| 6. தொழில் நிறுவனங்கள் | ” | ” | ” | ” | ” | ” |
| 7. உயர்தொழில்/கண்ணியத் தொழில் | ” | ” | ” | ” | ” | ” |
| 8. ஏனையவை | ” | ” | ” | ” | ” | ” |

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81